[2023 ஏப்ரல் 17

(உ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2023 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 34 முதல் 43 வரையிலான 10 அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

5. அறிவிப்பு

இந்திய முத்திரைச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 2023 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2023 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

இந்திய முத்திரைச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2023 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

2023 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்) (குறுக்கீடு)

மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள். வரவேற்று அமர்கிறீர்களா?

திரு. வி.பி. நாகைமாலி: *இல்லை. அந்தக் கட்டணங்களெல்லாம் அதிகமாக இருக்கிறது. 20 ரூபாய் என்பது. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எதிர்ப்பது என்றால், அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன், ஆதரிக்கிறேன் அல்லது விவரம் கேட்கிறேன், இந்த 3-தான்.*

திரு. வி.பி. நாகைமாலி: *இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

TRUTH ALONE TRIUMPHS